பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

06 12 2025 6 45

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவு சர்வதேச சவால்களை எதிர்கொள்வதற்கான வலிமையை அளித்திடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பல்வேறு துறைகளில் ரஷ்யா உடன் இணைந்து செயல்படுவது குறித்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

3. மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. மேகதாட்டுவில் அணை கட்டுவது தொடர்பான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்படவில்லை என்று காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் திரு. ஹல்தர் தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவு சர்வதேச சவால்களை எதிர்கொள்வதற்கான வலிமையை அளித்திடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வருடாந்திர உச்சி மாநாட்டுக்குப் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் விரைவில் இறுதிக்கட்டத்தை எட்டும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

ரஷ்யாவில் இருந்து இந்தியா வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான 30 நாள் இ-விசா வழங்கும் நடைமுறை விரைவில் தொடங்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச புலிகள் கூட்டமைப்பில் இணைய ரஷ்யா முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் மற்றும் ஊடகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 16 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

<<<<>>>>

உணவு, விவசாயம், மருந்து உற்பத்தி, ஜவுளி மற்றும் வாகன உற்பத்தி துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து ரஷ்ய பொருளாதார

மேம்பாட்டு அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்துவது குறித்தும் அந்நாட்டு அமைச்சர் திரு. Maxin Reshet Nikov உடன் விரிவான ஆலோசனை நடத்தியதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தின் பல்வேறு குழுக்களில் மூன்றில் ஒரு பங்கு பெண் உறுப்பினர்கள் இடம்பெறுவது உறுதி

செய்யப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில், திரைப்பட தணிக்கை குழு மற்றும் மறு மதிப்பீட்டுக் குழுவில் 50 சதவீத பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

திரைப்படங்களுக்கான தணிக்கை சான்றிதழ் வழங்கும் நடைமுறைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

திரைப்படங்களுக்கான எண்ணிக்கை அடிப்படையில் தணிக்கை மற்றும் மறுமதிப்புக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என்றும், குறித்த நேரத்தில் தணிக்கை சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தணிக்கை சான்றிதழ் தொடர்பான தரவுகளை பாதுகாப்பாகவும், ஒருங்கிணைக்கும் வகையிலும் சில மாற்றங்கள்

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாட்டுவில் அணை கட்டுவது தொடர்பான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்படவில்லை என்றும், எனவே அது தொடர்பான விவாதம் தேவையற்றது என்றும் காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் திரு. ஹல்தர் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் கல்லணையில் ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

இந்த அணை தொடர்பான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேட்டூர், பவானி சாகர் உள்ளிட்ட அணைகளில் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் இருப்பு உள்ளதாக திரு. ஹல்தர் தெரிவித்தார்.

<<<<>>>>

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் தமிழகம் முழுவதும் பனை விதைகளை நடவு செய்யும் பணிகள் மக்கள் இயக்கமாக நடத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் 16ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின் மூலம் இதுவரை 2 கோடியே 24 லட்சம் பனை விதைகள் நடவு செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆறு மடங்கு அதிகமாகும்.

ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஐந்தாயிரம் விதைகள் என்ற இலக்குடன் பனை விதைகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கணக்கீட்டுப் படிவங்களை சரியாக பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு வாக்குச்சாவடி நிலை அலுவலர் திரு. குருபிரசாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

(Voice Byte - Guruprasad - 36 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதா சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலைப் பகுதிகளின் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் சுற்றுலாத்தலமான ஏற்காட்டில் கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது.

இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 53)

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஜெர்மனியில் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய ராணுவ சட்டத்திற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

------------

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 850ஆக அதிகரித்துள்ளது.

------------

நேபாளத்தில் Madhes மாகாண முதலமைச்சராக நேபாளி காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் திரு. கிருஷ்ண யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு சட்ட உதவிகள் வழங்க ஏதுவாக 864 ஒருங்கிணைந்த செயல்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

-----------

இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா, ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் இன்று தொடங்குகிறது.

-----------

ரயில் பாதைகளில் யானைகள் குறுக்கிட்டு விபத்துக்குள்ளாவதை தடுக்கும் வகையில் கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வடகிழக்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

-----------

கேரளாவில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கான கால அவகாசம் இம்மாதம் 18ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-----------

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நடைபெற்ற தேசிய அளவிலான பழைய நாணயங்கள், அஞ்சல்தலை குறித்த கல்விக் கண்காட்சியை ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

-----------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் பயனடையும் வகையில் தற்காப்புக் கலையான சிலம்பப் பயிற்சியை மாவட்ட வருவாய் அலுவலர் தொடங்கி வைத்தார்.

-----------

திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் திருக்கோயிலில் கார்த்திகை தீப திருநாளையொட்டி நடைபெற்ற சொக்கப்பனை வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

--------------

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

--------------

ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 10ஆம் தேதி தொடங்கி 13ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

துபாயில் நடைபெறும் இப்போட்டியில் 35 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 தடகள வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 122 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

<<<<The End>>>>